தினமணி

**கோவையில் விவசாயம், தோட்டக்கலை கண்காட்சி: ஆர்வத்துடன் விவசாயிகள் பங்கேற்பு**

First Published : 29 May 2011 10:25:37 AM IST

கோவை, மே 28: கோவையில் நடைபெற்றுவரும் விவசாயம் மற்றும் தோட்டக்கலைக் கண்காட்சியில் விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்கின்றனர்.

÷சிங்காநல்லூர் உழவர் சந்தை அருகில் விஜயா கண்காட்சி வளாகத்தில் நடைபெற்று வரும் இக் கண்காட்சியை, வேளாண் பல்கலைக்கழக துணைவேந்தர் பி.முருகேசபூபதி வெள்ளிக்கிழமை துவக்கிவைத்தார். திங்கள்கிழமை (மே 30) வரை நடைபெறும் இக் கண்காட்சியை விவசாயிகள் ஆர்வத்துடன் பார்வையிடுகின்றனர்.

÷இதுகுறித்து கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ள டிரேடு இந்தியா ஃபேர்ஸ் அண்ட் எக்ஸிபிஷன் நிறுவனத் தலைவர் டி.பாலசுந்தரம் கூறியது:

÷இக் கண்காட்சியில் 150-க்கு மேற்பட்ட நிறுவனங்கள் விவசாயம் மற்றும் தோட்டக்கலை தொடர்பான அரங்குகள் அமைத்துள்ளன.

மாட்டுத் தீவனம், உரம், விதைகள் மற்றும் தோட்டப் பயிர்கள் உள்பட விவசாயம் சார்ந்தவை இடம் பெற்றுள்ளன.

÷தட்டு மக்காசோளத்தைப் பாதுகாக்கும் புதிய முறைகள், புதிய இன ஆடுகள், டிரேக்டர் நிறுவனங்கள், சொட்டுநீர்ப் பாசன முறைகள், விவசாயம் சார்ந்த புத்தகங்களும் அரங்குகளில் இடம்பெற்றுள்ளன.

÷இக்கண்காட்சியை விவசாயிகள் பார்வையிடுவதற்காக, 3 லட்சம் இலவச கூப்பன்கள் பல்வேறு நிறுவனங்கள் மூலமாக விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. கர்நாடகா உள்பட பிற மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான விவசாயிகள் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ÷இலவச கூப்பன் இல்லாதவர்களுக்கு நுழைவுக் கட்டணமாக ரூ. 10 வசூலிக்கப்படுகிறது. இலவச வேன் வசதி செய்யப்பட்டுள்ளது. தினமும், முதலில் வரும் ஆயிரம் விவசாயிகளுக்கு இலவசமாக இயற்கை உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்துகள் வழங்கப்படுகின்றன என்றார்.

**வேளாண் துறை சார்பில் உரம் விற்பனையாளர்களுக்கான கலந்தாய்வு கூட்டம்**

First Published : 29 May 2011 02:07:46 PM IST

செங்கம், மே 28: உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனையாளர்களுக்கான கலந்தாய்வு கூட்டம் செங்கம் வேளாண்மை துறை அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு வேளாண்மை உதவி இயக்குநர் சிவக்குமார் தலைமை தாங்கினார். வேளாண்மை அலுவலர் ரா.அருள்தாஸ் பங்கேற்று பேசியதாவது:

உரம் மற்றும் பூச்சி மருந்து விற்பனை செய்பவர்கள் தவறாமல் விற்பனை உரிமம் பெற்றிருக்க வேண்டும், உரம் மற்றும் பூச்சி மருந்துகளை அரசு நிர்ணயித்த விலைக்கே விற்பனை செய்யவேண்டும். கடைகளில் தவறாமல் விலைப்பட்டியல், இருப்பு பதிவேடு, பணப்பதிவேடு பராமரிக்க வேண்டும். விற்பனை ரசீதுகளில் விவசாயிகளின் கையெப்பம் தவறாமல் பெறவேண்டும். எண்டோசல்பான் பூச்சி மருந்து விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

**மாம்பழங்கள் பறிமுதல்**

First Published : 29 May 2011 09:48:38 AM IST

திண்டிவனம், மே 28: திண்டிவனம் நகராட்சி சுகாதாரதுறை அதிகாரிகள் சனிக்கிழமை நகரில் உள்ள மாம்பழக் குடோனில் திடீர் சோதனை நடத்தியதில் 20 டன் மாம்பழங்கள் கார்பைடு கல் மூலம் பழுக்க வைக்கப்பட்டுள்ளதை கண்டுபிடித்து அதனை பறிமுதல் செய்தனர்.

இந்திரா காந்தி பேருந்து நிலைய வளாகத்தில் ஒரு குடோனில் 20 டன் மாம்பழங்கள் கார்பைடு கல் மூலம் பழுக்க வைத்துள்ளதாக நகராட்சி சுகாதார துறை அதிகாரிகளுக்கு தகவல் கிடைத்தது. இதனை அடுத்து சம்பவ இடத்துக்கு சென்ற சுகாதார மேற்பார்வையாளர் பாலச்சந்திரன், சுகாதார ஆய்வாளர் ராஜரத்தினம் உள்ளிட்டோர் குடோனை சோதனை நடத்தினர்.

அதில் அங்கு வைக்கப்பட்டிருந்த 20 டன் மாம்பழத்துடன் சிறு சிறு பாக்கெட்டுகளில் கார்பைடு கல் மறைத்து வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த மாம்பழங்களை பறிமுதல் செய்த அதிகாரிகள் இது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென எச்சரித்துள்ளனர்.

**மண் மாதிரி விழிப்புணர்வு முகாம்**

First Published : 29 May 2011 11:53:12 AM IST

பெரம்பலூர், மே 28: பெரம்பலூர் அருகேயுள்ள லாடபுரம் கிராமத்தில், பெரம்பலூர் மண் பரிசோதனை நிலையம் சார்பில் மண் மாதிரி விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாமுக்கு தலைமை வகித்த மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் கீதா, மண் பரிசோதனை செய்வதின் அவசியம், பிரச்னைக்குரிய மண் சீர்திருத்த முறைகள் குறித்து விளக்கி பேசினார்.

இதில், வேளாண் அலுவலர் மலர்விழி நுண்சத்து பற்றாக்குறை குறித்தும், அதை நிவர்த்தி செய்யும் முறைகள் குறித்தும், வேளாண் அலுவலர் அசோகன் தண்ணீர் மாதிரி எடுக்கும் முறை குறித்து விளக்கி கூறினர்.

மண் பரிசோதனை நிலைய உதவி வேளாண் அலுவலர்கள் வெங்கடேசன், ஜெய்சங்கர் ஆகியோர் மண் மாதிரி செயல்விளக்கம் செய்து காண்பித்தனர். இம் முகாமில், துணை வேளாண் அலுவலர் மணிவேல் மற்றும் லாடபுரம் கிராமத்தைச் சேர்ந்த 30-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

முகாமுக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர் சுரேஷ் செய்திருந்தார்.

தினமலர்

**ஏலக்காய் விலையில் வீழ்ச்சி:ஏற்றுமதியும் குறைந்தது**

மே 30,2011,00:18



தேவாரம்:ஏற்றுமதிக்கான ஆர்டர் குறைந்து, வரத்து அதிகரித்துள்ளதால், ஏலக்காய் விலை மூன்றில் ஒரு பங்காக சரிந்து, கிலோ 659 ரூபாய்க்கு விற்பனையானது.இடுக்கி மாவட்டத்தில், ஒரு லட்சத்து 50 ஆயிரம் ஏக்கரில், ஏலக்காய் சாகுபடி நடைபெறுகிறது. சி.பி.எம்.சி., மாஸ், சி.பி.ஏ., உட்பட, 8 ஏல மையங்களில் விற்பனைக்கு பதிவு செய்யப்படுகிறது. கடந்த ஜூலை முதல் வாரத்தில், ஏலக்காய் விலை உச்சத்தில் இருந்தது. அதிகபட்சமாக கிரீன் கோல்டு ஏலக்காய் ரகம், கிலோ 1,950 ரூபாய்க்கு விற்பனையானது.

நடப்பாண்டு, ஏலக்காய் விலை சரிந்து வருகிறது. தற்போது, கிலோ 659 ரூபாய்க்கு விற்பனையாகிறது. கடந்தாண்டுடன் ஒப்பிடுகையில், மூன்றில் ஒரு பங்கு விலை குறைந்துள்ளது. ஏலக்காய் மொத்த விற்பனையாளர்கள் சிலர் கூறியதாவது:கடந்தாண்டு சாதாரண ரக ஏலக்காய், கிலோ 1,700 ரூபாய்க்கு விற்றது. இந்த விலை, இந்தாண்டு 2,000 ரூபாய்க்கு மேல் விற்பனையாகும் என்று எதிர்பார்த்திருந்தோம். இடுக்கி ஹைரேஞ்ச் பகுதியில், விவசாயிகளிடம் 2,000 டன்னிற்கு மேல் ஏலக்காய் இருப்பு உள்ளது.கடந்தாண்டு அரபு நாடுகளுக்கு, 1,900 டன் ஏலக்காய், ஏற்றுமதி செய்யப்பட்டது. நடப்பு ஆண்டில், 1,000 டன்னிற்கும் குறைவாகவே ஏற்றுமதியாகி உள்ளது.

வீரிய ஒட்டு ரக முறையில் ஏலக்காய் சாகுபடி நடப்பதால், ஆண்டு முழுவதும் ஏலக்காய் அறுவடை நடைபெறுகிறது.ஜூன் மூன்றாவது வாரத்தில், ஏலக்காய் அறுவடை துவங்குவதால், வரத்து மேலும் அதிகரிக்கும். ஏற்றுமதி குறைந்து, வரத்து அதிகரித்துள்ளதால், விலையும் குறைந்து வருகிறது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

**பருத்தி ஏலம் ஒத்திவைப்பு விவசாயிகள் பெரும் கவலை**

பதிவு செய்த நாள் : மே 30,2011,01:55 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், பருத்தி ஏலம் ஒத்திவைக்கப்பட்டதால், விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மஞ்சள், பருத்தி உள்ளிட்டவை வார தினங்களில் ஏலம் நடந்து வருகிறது. தரமான பருத்தி மற்றும் மஞ்சள் இங்கு கிடைப்பதால், வெளி மாவட்ட வியாபாரிகள் போட்டி போட்டுக் கொண்டு அதிக விலைக்கு வாங்கிச் செல்கின்றனர். இந்நிலையில், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வியாபாரிகள் விலைக்கு வாங்கிய, 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பருத்தி மூட்டைகளை எடுத்துச் செல்லாமல், கூட்டுறவு சங்க அலுவலக வளாக குடோன், திறந்த வெளியில் அடுக்கி வைத்துள்ளனர். அதன்

காரணமாக, போதிய இடம் இல்லாத நிலை ஏற்பட்டது. அதனால், கடந்த, 15ம் தேதி, 22ம்தேதி ஆகிய இரண்டு ஞாயிற்றுக்கிழமை நடக்க இருந்த பருத்தி ஏலம் ஒத்திவைக்கபட்டது. நேற்று, 29ம் தேதி நடக்க இருந்த பருத்தி ஏலமும் ஒத்திவைக்கப்பட்டதாக, கூட்டுறவு சங்க அலுவலர்கள் அறிவித்துள்ளனர். தொடர்ந்து மூன்று வாரங்களாக பருத்தி ஏலம் நடக்காததால், பருத்தி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை சூறாவளியில் வாழை சேதம் நஷ்டஈடு வழங்க வேண்டும்**

பதிவு செய்த நாள் : மே 30,2011,00:11 IST

தொட்டியம்: "தொட்டியம் பகுதியில் சூறாவளிக் காற்றால் பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும்' என விவசாயிகள் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. தொட்டியம் வட்ட அனைத்து விவசாயிகள் சங்க பொறுப்பாளர்கள் கூட்டம் சோழிய வேளாளர் திருமண மண்டபத்தில் நடந்தது. கூட்டத்தில் தோட்டக்கலை பயிர் சாகுபடியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் வினாயகமூர்த்தி, தேசிய வாழை அபிவிருத்தி வாரிய அகில இந்திய துணைத்தலைவர் சுகுமார், தொட்டியம் வெற்றிலை விவசாயிகள் சங்கத்தலைவர் தியாகராஜன் பிள்ளை, தொட்டியம் வாழை உற்பத்தியாளர்கள் சங்க துணைச்செயலாளர் மணிக்குட்டி, காவிரி டெல்டா பாசன விவசாயிகள் சங்க செயலாளர் காந்திபித்தன், வாழை விவசாயி மயில்வாகனன் உட்பட பலர் பங்கேற்றனர். தமிழகத்தில் மூன்றாவது முறையாக முதல்வராக பொறுப்பேற்றுள்ள முதல்வர் ஜெயலலிதாவிற்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. விளையாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுள்ள அமைச்சர் சிவபதிக்கு பாராட்டு கூட்டம் நடத்துவது, கடந்த மாதம் திடீரென அடித்த சூறாவளி காற்றால் தொட்டியம் பகுதியில் லட்சக்கணக்கான வாழைகள் சேதமடைந்து, பல கோடி ரூபாய் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட வாழை விவசாயிகளுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க அரசு ஆவண செய்ய வேண்டும் என்பன உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**சரிவை நோக்கி செல்லும் மஞ்சள் விலை விவசாயிகள் கவலை**

பதிவு செய்த நாள் : மே 30,2011,01:53 IST

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 80 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. மஞ்சள் ஏற்றுமதி குறைந்து, விலை சரிவை நோக்கிச் சென்றதால், மஞ்சள் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், சனிக்கிழமைதோறும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. ஏலத்தில், ஆத்தூர், தம்மம்பட்டி,

தலைவாசல்,கெங்கவல்லி, சின்னசேலம்,கள்ளக்குறிச்சி, திட்டக்குடி, திருவண்ணாமலை, பெரம்பலூர், அரியலூர் ஆகிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் விளைவித்த மஞ்சள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். கடந்த, 21ம் தேதி நடந்த மஞ்சள் ஏலத்தில், குவிண்டால், 11 ஆயிரத்து 409 ரூபாய்க்கு விற்றது. மஞ்சள் விலை ஏறு முகத்தை நோக்கிச் சென்றதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். நேற்று முன்தினம் நடந்த ஏலத்துக்கு, 2,300 மூட்டை மஞ்சளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்த பட்சமாக, 4,599 ரூபாயும், அதிகபட்சமாக, 9,111 ரூபாயும், உருண்டை மஞ்சள் குறைந்த பட்சமாக 3,199 ரூபாயும், அதிகபட்சமாக, 7,277 ரூபாய்க்கும் விற்றது. விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்த, 2,300 மூட்டை மஞ்சள், 80 லட்சம் ரூபாய்க்கு வர்த்தகம் நடந்தது. கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தை காட்டிலும், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில், விரலி மற்றும் உருண்டை மஞ்சள் சராசரியாக குவிண்டாலுக்கு, 2,000 ரூபாய் விலை குறைந்துள்ளது. திடீரென மஞ்சள் விலை சரிவை நோக்கிச் சென்றதால், விவசாயிகள் கவலையடைந்தனர். இதுகுறித்து ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க அலுவலர் ஒருவர் கூறியதாவது:

மஞ்சள் வியாபாரிகள் அதிகளவு மஞ்சளை வாங்கி இருப்பு வைத்துள்ளனர். வடமாநில பகுதிக்கு மஞ்சள் ஏற்றுமதி இல்லாததால், ஏலத்துக்கு குறைந்த அளவு வியாபாரிகளே வந்தனர். மேலும், ஏலத்துக்கு மஞ்சள் வரத்து அதிகரித்துள்ளதால் விலை குறைந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**"எண்டோசல்பான்' விற்பனை செய்ய தடை மாவட்ட கலெக்டர் அறிவிப்பு**

பதிவு செய்த நாள் : மே 29,2011,01:33 IST

நாமக்கல்: ""நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பூச்சி மருந்து, உரக்கடைகளிலும், "எண்டோசல்பான்' விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. மீறி விற்பனை செய்வது தெரியவந்தால், கடை உரிமம் ரத்து செய்யப்படும்,'' என, மாவட்ட கலெக்டர் மதுமதி பேசினார். நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர் கூட்டம் நடந்தது. மாவட்ட கலெக்டர் மதுமதி தலைமை வகித்து பேசியதாவது: நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அனைத்து பூச்சி மருந்து, உரக்கடைகளிலும், "எண்டோசல்பான்' விற்பனை செய்ய தடை செய்யப்பட்டுள்ளது. மீறி விற்பனை செய்வது தெரியவந்தால், கடை உரிமம் ரத்து செய்யப்படும். ஆற்றில் மணல் எடுப்பதற்கு உரிய அனுமதி வழங்கப்படுகிறது. அனுமதியின்றி மணல் எடுத்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விவசாயிகளுக்கு தேவையான உரம் தற்போது வழங்கப்பட்டுள்ளது. பற்றாக்குறை ஏற்பட்டால், உரங்களைப் பெற்று வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும். கார்பைட் மூலம் மாம்பழங்கள் பழுக்க வைத்து விற்பனை செய்வதை தடுக்கும்

வகையில், சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மூலம் சோதனை மேற்கொண்டு, அதை தடுக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

சர்க்கரை ஆலைகளில் கரும்பு வெட்டுக்கூலி அதிகரித்தாலும், அதை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. கரும்பு வெட்டுக்கூலியை குறைப்பதற்கு, ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.கொல்லிமலையில் மாவுப்பூச்சி தாக்குதல் அதிகம் உள்ளது. அதைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். சாயக்கழிவுகளால் ஏற்படும் பாதிப்பை தவிர்க்கும் வகையில், அனுமதியின்றி செயல்பட்டு வரும் சாயப்பட்டறைகள் அகற்றப்படும்.

கடந்த இரு மாதத்துக்கு முன் நடந்த கூட்டத்தில், விவசாயிகள் குறைகள் சம்மந்தமாக, 108 மனுக்கள் பெறப்பட்டன. அதில், 92 மனுக்கள் மீது நடவடிக்கை எடுத்து, அதற்கு உரிய பதில் அனுப்பப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு பிரச்னை ஏற்பட்டால், அதுகுறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். மாவட்ட வருவாய் அலுவலர் சீத்தாலட்சுமி, மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் சச்சிதானந்தம், வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) பிரபாகரன், கலெக்டர் நேர்முக உதவியாளர் ராஜா, வேளாண் அலுவலர் சதாசிவம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**மஞ்சள் சாகுபடி பணியில் விவசாயிகள் தீவிரம்**

பதிவு செய்த நாள் : மே 29,2011,01:30 IST

கவுந்தப்பாடி: கவுந்தப்பாடி சுற்று வட்டார பகுதியில் மஞ்சள் சாகுபடிக்கு விதை விதைப்பு சுறுசுறுப்பாக நடக்கிறது கடந்த இரண்டு ஆண்டுகளாக விவசாயிகள் வாழ்வில் உயர்வை ஏற்படுத்திய மஞ்சள், தங்கத்தின் விலையைவிட மஞ்சள் விலை அதிக அளவில் விற்பனை ஆனது. தற்போது, இரண்டு மாதங்களாக மஞ்சளின் விலை 18 ஆயிரத்தில் இருந்து 8 ஆயிரமாக குறைந்துள்ள போதும், மீண்டும் மஞ்சள் விலை உயரும் என்ற ஆர்வத்தில் விவசாயிகள் மஞ்சள் சாகுபடியை அதிகமானோர் செய்ய துவங்கி உள்ளனர்.

மஞ்சள் சாகுபடி செய்ய தற்போது வைகாசி, ஆனி மாதங்களில் விதைவிதைப்பு பணிகள் துவக்கப்பட்டுள்ளது. நாட்டு மஞ்சள், ஒரிசா மஞ்சள் போன்ற மஞ்சள் நடவு பணிகள் நடந்து வருகிறது. பணப்பயிரான மஞ்சள் சகுபடி 10 மாத பயிராகும். மஞ்சள் பயிருடன் ஊடு பயிராக சேனைக்கிழங்கு, மிளகாய், கீரை மற்றும் சின்னவெங்காயம் போன்ற பயிர்கள் பயிர்

செய்யப்படுகிறது. தற்போது, கவுந்தப்பாடி, ஆண்டிபாளையம், பொன்னாச்சிபுதூர், மேவாணி, சவண்டப்பூர், அத்தாணி, கருவல்வாடிப்புதூர், நல்லிக்கவுண்டனூர் மற்றும் கூத்தம்பூண்டி ஆகிய ஊர்களில் விவசாயிகள் மஞ்சள் விதை விதைப்பில் முழு கவனம் செலுத்தி வருகின்றனர்.

**தானியங்களால் தேசிய கொடி அமைத்தவர்களுக்கு சான்றிதழ்**

பதிவு செய்த நாள் : மே 29,2011,21:54 IST

பொள்ளாச்சி : பொள்ளாச்சியில் குடியரசு தினத்தன்று கின்னஸ் சாதனைக்காக, தானியங்களால் தேசிய கொடி வடிவமைத்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. பொள்ளாச்சியில் கடந்த குடியரசு தினத்தன்று கின்னஸ் சாதனைக்காக, தானியங்களால் ஆன தேசியக்கொடி வடிவமைக்கப்பட்டது. பொள்ளாச்சி நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 18 மீட்டர் அகலம், 27 மீட்டர் நீளத்தில் தேசியக்கொடி அமைக்கப்பட்டது. சிகப்பு நிறத்திற்காக ஆயிரம் கிலோ ஜிலேபி பருப்பும், வெள்ளை நிறத்திற்காக ஆயிரம் கிலோ அரிசியும், பச்சை நிறத்திற்காக ஆயிரம் கிலோ பாசிப்பயிறும், நீல நிறத்திற்காக நீல வர்ணம் பூசப்பட்ட அரிசியும் பயன்படுத்தப்பட்டது.தானியங்களால் ஆன தேசியக்கொடியை அரசு போக்குவரத்துக்கழக பணியாளர்கள், பி.ஏ.பி., பாசன சங்க தலைவர்கள் மற்றும் விவசாயிகள், ஊர்க்காவல் படையினர், கேரளா சமாஜத்தினர், மகளிர் சுய உதவிக்குழுக்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள், கூட்டுறவு நகர வங்கி பணியாளர்கள் இணைந்து வடிவமைத்தனர்.தானியங்களால் மீக நீள, அகலமான தேசியக்கொடி வடிவமைத்தது கின்னஸ் சாதனையில் இடம் பெற்று, பங்கேற்பாளர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.சான்றிதழ்களை ஒப்படைக்கும் விழா பொள்ளாச்சியில் நடந்தது. பொள்ளாச்சி என்.ஜி.எம்., கல்லூரி முதல்வர் ராஜ்குமார் தலைமை வகித்தார். கின்னஸ் சாதனைக்காக தானியங்களால் ஆன தேசியக்கொடி வடிவமைக்கும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த ஊர்க்காவல் படைத்தளபதி கண்ணனிடம் கின்னஸ் சாதனைக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சியில் தேசியக்கொடி அமைத்த அனைத்து அமைப்பினரும் கலந்து கொண்டனர்.

**மண் பரிசோதனை விவசாயிக்கு அழைப்பு**

பதிவு செய்த நாள் : மே 30,2011,00:28 IST

கரூர்: "தாந்தோணி வட்டார பகுதிகளில் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி செய்யும் விவசாயிகள் மண் பரிசோதனை செய்து கொண்டு பயன் பெறலாம்' என உதவி இயக்குநர் சொர்ண மாணிக்கம் கேட்டு கொண்டுள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: சாகுபடி செய்யவிருக்கும் பயிரின் வேர்ப்பகுதி செல்லும் ஆழத்தை பொறுத்து மண்மாதிரி சேகரம் செய்ய வேண்டும். காய்கறி பயிர்களுக்கு ஒரு அடி ஆழத்திலும், மலர்ப்பயிர்களுக்கு இரண்டு அடி ஆழத்திலும்,

பழப்பயிர்களுக்கு நான்கு அடி ஆழத்திலும், அடிக்கு ஒரு மாதிரி வீதம் மண்மாதிரி எடுக்க வேண்டும்.
மண்மாதிரியுடன் விவசாயிகளின் பெயர், முகவரி, சர்வே எண், பாசன வசதி, சென்ற தடவை சாகுபடி செய்யப்பட்ட பயிர், தற்போது சாகுபடி செய்யப்பட்ட பயிர் போன்ற விபரங்களை குறித்து அனுப்ப வேண்டும். ஒரு மண் மாதிரியை ஆய்வு செய்திட மண்பரிசோதனை நிலையத்தில் 10 ரூபாய் மட்டுமே ஆய்வு கட்டணமாக வசூல் செய்யப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**உர விநியோக குறைபாடு புகார் தெரிவிக்க அழைப்பு**

பதிவு செய்த நாள் : மே 30,2011,00:37 IST

பெரம்பலூர்: "தனியார் மற்றும் கூட்டுறவு மூலம் விற்பனை செய்யப்படும் உர விநியோகத்தில் குறைபாடு இருந்தால் புகார் தெரிவிக்கலாம்' என மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சிவக்குமார் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை: குறுவை நெல் மற்றும் மானாவாரிப்பயிர்கள் சாகுபடி ஆரம்பிக்க உள்ள நிலையில் உர விநியோகம் செவ்வனே நடத்திட சென்னை வேளாண் ஆணையர் உத்தரவின்பேரில் எனது மேற்பார்வையில் உர விநியோகத்தினை கண்காணிப்புதற்காக வேளாண் இணை இயக்குநர் அலுவலகத்திலிருந்து வரும் ஜூன் 1ம்தேதி முதல் கண்காணிப்புக்குழு செயல்படவுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரம் உரிய நேரத்தில் கிடைக்க வில்லையானாலும், மூட்டையின்மேல் பொறிக்கப்பட்டுள்ள விற்பனை விலையினை விட கூடுதல் தொகை வசூல் செய்தாலும், கொடுத்த தொகைக்கு பட்டியல் தராமல் துண்டு சீட்டில் எழுதி கொடுத்தாலும், உரம் இருப்பு விபரம் மற்றும் விற்பனை விலையினை விளம்பர பலகையில் எழுதி வைக்காமல் இருந்தாலும், உரத்தினை இருப்புவைத்துக்கொண்டு தரமறுத்தாலும், கூட்டுறவு கடன் சங்கத்தின் உரம் பெறுவதில் பிரச்சனை ஏற்பட்டாலும், விவசாயிகள் வேளாண் இணை இயக்குநர் அலுவலக ஃபோன் நம்பர் 04328-225773, மொஃபைல் 94439-54646 என்ற எண்களில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். அவ்வாறு பெறப்படும் புகார் மீது உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**கொப்பரை வரத்து குறைவு: விலையில் சரிவு**

பதிவு செய்த நாள் : மே 29,2011,02:14 IST

பொள்ளாச்சி: தேங்காய் மற்றும் கொப்பரை வரத்து குறைந்து வரும் நிலையில், விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது.காங்கயம் மார்க்கெட்டில், கடந்த 21ம் தேதி நிலவரப் படி, கொப்பரை கிலோவுக்கு

68-69 ரூபாய் வரையிலும், தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,500, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 110 ரூபாயும் விலை கிடைத்தது.விவசாயிகள் பறித்து உரித்து வைத்திருக்கும் தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 18 ஆயிரத்து 500 முதல் 19 ஆயிரம் வரை, சென்னை உட்பட பிற பகுதிகளுக்கு உணவுத் தேவைக்கு அனுப்பப்படும் தேங்காய், டன்னுக்கு 17 ஆயிரம் முதல் 18 ஆயிரம் வரை நிர்ணயிக்கப்பட்டது. விவசாயிகள் பறித்து இருப்பு வைத்திருக்கும் தேங்காய், ஒன்றுக்கு 11.25, வியாபாரிகள் சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள, தேங்காய்க்கு 9.50 - 10.50 ரூபாய் வரையிலும் விலை கொடுக்கப்பட்டது.நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 64 - 66, தேங்காய் பவுடர், கிலோவுக்கு 110, தேங்காய் எண்ணெய், 15 கிலோ டின்னுக்கு 1,415 - 1,420 ரூபாய் வரை விலை கிடைத்தது. விவசாயிகள் சொந்தப் பொறுப்பில் பறித்து உரித்த தேங்காய் (மட்டை தவிர), டன்னுக்கு 16 ஆயிரத்து 500 முதல் 17 ஆயிரம் வரை நிர்ணயிக்கப்பட்டது. சென்னை உட்பட பிற பகுதிகளுக்கு, உணவுத் தேவைக்காக அனுப்பப்படும் தேங்காய், டன்னுக்கு 16 ஆயிரம் ரூபாய் விலை கிடைத்தது. விவசாயிகள், சொந்தப் பொறுப்பில் பறித்து இருப்பு வைத்துள்ள தேங்காய், ஒன்றுக்கு 10.50, சொந்தப் பொறுப்பில் பறித்துக் கொள்ள 8.50 - 9.15 முதல் விலை வழங்கப்பட்டது. கொப்பரை உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கூறுகையில், "கொப்பரை வரத்து அதிகரித்து வந்த போது, ஒரே நிலையில் விலை இருந்தது. தற்போது, தேங்காய் மற்றும் கொப்பரை வரத்து குறைந்து வரும் நிலையில், விலை உயராமல் சரிந்து வருகிறது. சிண்டிக்கேட் காரணமாக, கொப்பரை கிலோவுக்கு 3 ரூபாய் விலை சரிந்துள்ளது' என்றனர்.

**மக்காச்சோளம் விலை சரிந்ததால் கறிக்கோழி உற்பத்தியாளர்கள் ஆறுதல்**

பதிவு செய்த நாள் : மே 29,2011,21:58 IST

பல்லடம் : கறிக்கோழி தீவனம் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் மக்காச்சோளம் கொள்முதல் விலை, டன்னுக்கு 1,500 ரூபாய் சரிந்ததால், கறிக்கோழி உற்பத்தியாளர்கள், தீவனம் தயாரிப்பாளர்கள் ஆறுதல் அடைந்துள்ளனர்.
கறிக்கோழிகளுக்கு தீவனமாக, மக்காச்சோளம், சோயா மற்றும் சில்வர்மத்தி கருவாடு கொண்டு தயாரிக்கப்படும் கோழித்தீவனங்கள் உணவாக வழங்கப்படுகின்றன. கறிக்கோழி தீவனம் உற்பத்தியில் சோயாவின் பங்கு 30 சதவீதம். சோயாவில் புரதச்சத்து அதிகமாக உள்ளதால், அவை கறிக்கோழிகளை ஆரோக்கியமாகவும், எடை அதிகம் கொண்டதாகவும் வளரச்செய்கிறது. பல்லடம் பகுதியில் உள்ள சின்ன உற்பத்தியாளர்கள் தீவனம் தயாரிக்கும் கம்பெனிகளில் விலைக்கு வாங்கி பயன்படுத்துகின்றனர். பல்லடம் பகுதிக்கு தேவையான சோயா, மகாராஷ்டிரா மாநிலத்தில் இருந்து கொண்டு வரப்படுகின்றன. தினமும் சராசரியாக 75 லாரி லோடு வரை

கொள்முதல் செய்யப்படுகின்றன. கடந்த ஆறு மாதங்களாக, ஒரு கிலோ சோயா கொள்முதல் விலையாக ரூ.20 ஆக உள்ளது. சோயா கொள்முதல் விலை சரியாமல் நீடித்து வருவதால், பல்லடம் பகுதியில் உள்ள கறிக்கோழி உற்பத்தியாளர்கள், தீவனம் தயாரிப்பாளர்கள் கவலை அடைந்துள்ளனர். கடந்த மாதம் ஒரு டன் ரூ.13 ஆயிரமாக இருந்த மக்காச்சோளம் விலையில், 1,500 ரூபாய் தற்போது குறைந்துள்ளது. இது, கறிக்கோழி உற்பத்தியாளர்கள் மற்றும் கோழித்தீவனம் தயாரிப்பாளர்களை சற்று ஆறுதல் அடைய வைத்துள்ளது.

**அரசு கொள்முதல் மையம் துவக்கம்**

பதிவு செய்த நாள் : மே 29,2011,21:55 IST

மடத்துக்குளம் : மடத்துக்குளம் ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளாகத்தில் அரசு கொள் முதல் மையம் நேற்று துவங்கப்பட்டது. திருப்பூர் கலெக்டர் சமயமூர்த்தி தலைமை வகித்தார். பொள்ளாச்சி எம்.பி., சுகுமார் முன்னிலை வகித்தார். அரசு கொள்முதல் மையத் தை தொழில்துறை அமைச்சர் சண்முகவேலு துவக்கி வைத்து பேசியதாவது:
மடத்துக்குளம் பகுதியில் அரசு கொள்முதல் மையத் தில் நெல்லுக்கு நியாயமான விலை வழங்கப்படும். இடைத்தரகர்கள் இல்ல்மல் நேரடியாக கொள்முதல் நடப்பதால் எடை மோசடிகள் நடக்காமல் தடுக்கப்பட்டு விவசாயிகளுக்கு ஏக்கருக்கு பத்து ஆயிரம் ரூபாய் கூடுதலாக வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது, என்றார்.

**கரும்பு அரவையில் சாதனை**

பதிவு செய்த நாள் : மே 29,2011,01:10 IST

திருக்கோவிலூர் : பெரியசெவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை 4 லட்சம் மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்து தமிழகத்தில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளது. சர்க்கரை ஆலை தனி ஆட்சியர் கலைராஜன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: விழுப்புரம் மாவட்டம் உளுந்தூர்பேட்டை அடுத்த பெரிய செவலை செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை 2010-11ம் ஆண்டிற்கான அரவை 2010 நவ. 18ம் தேதி துவங்கி கடந்த 16ம் தேதியுடன் முடிக்கப் பட்டது. இக்காலகட்டத்தில் 4 லட்சத்து 9 ஆயிரத்து 883 மெட்ரிக் டன் கரும்பு அரவை செய்யப் பட்டது. இது கடந்த ஆண்டை காட்டிலும் ஒரு லட்சத்து, ஆயிரத்து 188 டன் கூடுதலாகும். தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளில் இது தான் அதிகம்.கரும்பின் கட்டுமானமும் கடந்த ஆண்டைவிட அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு

8.67 சதவீதமாக இருந்தது. இந்த ஆண்டு 8.81 சதவீதமாக உயர்ந்துள்ளது. விவசாயிகளுக்கு 77 கோடியே 87 லட்சத்து 78 ஆயிரம் ரூபாய் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. செங்கல்வராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலை எல்லை பகுதியில் புதிய தனியார் ஆலைக்கு சில பகுதிகள் ஒதுக்கீடு செய்திருந்தும், விவசாயிகள், வாகன உரிமையாளர்கள், டிரைவர்கள், ஆலை தொழிலாளர்கள், பணியாளர்களின் முழு ஒத்துழைப்பால் நிகழ்த்த முடிந்தது.

**லோன் வழங்காமல் இரு விவசாயிகளை ஏமாற்றியவேளாண்மை கூட்டுறவு பாங்க் நஷ்டஈடு வழங்க உத்தரவு**

பதிவு செய்த நாள் : மே 29,2011,02:51 IST

திருநெல்வேலி:லோன் வழங்காமல் அடமானபத்திரம் மட்டும் எழுதிய வாங்கிய, பொட்டல் புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு பாங்க் நிர்வாகம், இரு விவசாயிகளுக்கு தலா 28 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடு வழங்க நுகர்வோர் கோர்ட் உத்தரவிட்டது.அம்பாசமுத்திரம் அருகேயுள்ள வெள்ளிக்குளம் எம்.ஜி.ஆர்.,நகரை சேர்ந்தவர் முருகன். விவசாயி. இவர் கடந்த 2007ம் ஆண்டு உழவு மாடு வாங்குவதற்கு 30 ஆயிரம் ரூபாய் லோன் கேட்டு பொட்டல் புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு பாங்க்கில் லோன் கேட்டு மனுத்தாக்கல் செய்தார். அவரது மனுவை பரிசீலனை செய்த அதிகாரிகள், அவரது வீட்டை அடமானமாக எழுதி வாங்கினர். ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குள் அவருக்கு லோன் கிடைக்கவில்லை.இதுகுறித்து கடந்த 2010ம் ஆண்டு கலெக்டரிடம் புகார் மனு அளித்தார். அந்தமனு மீதும் முறையான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.இதையடுத்து கடந்த 2010ம் ஆண்டு ஜூன் 1ம் தேதி வக்கீல்கள் முருக முரளிதரன், ஆறுமுகராஜ், சுப்பையா மூலம் நுகர்வோர் கோர்ட்டில் முருகன் வழக்கு தொடர்ந்தார். வழக்கை நுகர்வோர் கோர்ட் நீதிபதி ராமச்சந்திரன், உறுப்பினர்கள் பாலசுப்பிரமணியன், ஜெசிந்தா ஆகியோர் விசாரணை நடத்தினர்.வழக்கில், லோன் வழங்கப்படுவதற்கு முன்பே பொட்டல் புதூர் கூட்டுறவு பாங்க் முருகனின் வீட்டை அடமானமாக வாங்கியது தவறு. எனவே அவருக்கு ஏற்பட்ட மன உளைச்சலுக்கு 25 ஆயிரம் ரூபாயும், வழக்கு செலவிற்கு 3 ஆயிரம் ரூபாயும் வழங்க பொட்டல் புதூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு பாங்க்கிற்கு நுகர்வோர் கோர்ட் உத்தரவிட்டது.இதுபோல் அதே ஊரைச்சேர்ந்த நாராயணன் என்பவர் தொடுத்த வழக்கிலும் 25 ஆயிரம் ரூபாய் நஷ்டஈடும், வழக்கு செலவிற்கு 3 ஆயிரம் ரூபாயும் வழங்க வேண்டும் எனவும் நுகர்வோர் கோர்ட் உத்தரவிட்டது.

**2010ம் ஆண்டில் இந்தியாவின் வெங்காய ஏற்றமதி 31% சரிவு**

மே 29,2011,11:00



புதுடில்லி : 2010-11ம் நிதியாண்டில் இந்தியாவில் வெங்காய ஏற்றுமதி 31 சதவீதத்திற்கும் மேல் சரிவடைந்துள்ளது. இந்த ஆண்டில் 12.89 மில்லியன் டன் வெங்காயம் மட்டுமே ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. உற்பத்தி பாதிப்பு மற்றும் ஆண்டின் இறுதியில் வெங்காய ஏற்றுமதிக்கு அரசு தடை விதித்தது உள்ளிட்ட காரணங்களால் ஏற்றுமதியின் அளவு குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 2009-10 ம் ஆண்டில் இந்தியாவின் வெங்காய ஏற்றுமதி 18.73 மில்லியன் டன்னாக இருந்தது குறிப்பிடத்தக்கது. முக்கிய வெங்காய உற்பத்தி பகுதிகளான மகாராஷ்டிரா மற்றும் குஜராத்தில் அக்டோபர் முதல் நவம்பர் மாதங்களில் காலம் தவறி பெய்த மழையும் இந்த ஏற்றுமதி சரிவிற்கு காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் 2010 ம் ஆண்டின் இறுதியில் ஒரு கிலோ வெங்காயம் ரூ.70 முதல் 85 வரை விற்பனையானது குறிப்பிடத்தக்கது.

**பருவ மழை நன்கு இருக்கும் என்ற மதிப்பீட்டால் நடப்பாண்டில் நெல் உற்பத்தி அதிகரிக்கும்**

மே 29,2011,02:50



புதுடில்லி:நடப்பாண்டில் பருவ மழை நன்கு இருக்கும் என கணிக்கப் பட்டுள்ளது.எனவே, நாட்டின் நெல் விளைச்சல் கடந்த ஆண்டை விட அதிகரிக்கும் என்று மத்திய வேளாண்

அமைச்சகம் மதிப்பிட்டுள்ளது. இது குறித்து, மத்திய வேளாண் அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், 'நடப்பாண்டில் நெல் சாகுபடி பரப்பு, 4.20 - 4.30கோடி எக்டேர் என்ற அளவிலேயே இருக்கும். எனினும், பருவமழை நன்கு இருக்கும் என்று கணிக் கப்பட்டுள்ளதால், நெல் விளைச்சல் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வடமேற்கு மற்றும் ஜார்க்கண்ட் மாநிலங்களில் நெல் பயிரிட்டு வந்த விவசாயிகளில் சிலர், மக்காச்சோளம்,பருத்தி ஆகியவற்றை பயிரிடத் தொடங்கியுள்ளனர். இதனால் இப்பகுதிகளில் நெல் விளைச்சல் குறையும் என்றாலும், அதை ஈடு செய்யும் விதத்தில் கிழக்கு மாநிலங்களின் நெல் விளைச்சல் இருக்கும்' என்று தெரிவித்தார்.கடந்த 2008-09ம் ஆண்டு, இந்தியாவின் நெல் உற்பத்தி 10கோடி டன் என்ற சாதனை அளவை எட்டியது. அடுத்து வந்த ஆண்டுகளில், வறட்சியால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டது. கடந்த 2009-10ம் ஆண்டு நெல் உற்பத்தி 8 .90கோடி டன்னாகவும், 2010-11ம் ஆண்டு, 9.40 கோடி டன் என்ற அளவிலும் இருந்தது.நடப்பாண்டில், பருவ மழை சாதகமாக இருக்கும் என்ற கணிப்பும், அரசு நிர்ணயித்த நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையும், நெல் சாகுபடி பரப்பை அதிகரிக்க விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பதாக உள்ளது. ஆனால், விவசாயிகள் எதிர்பார்த்த அளவிற்கு, குறைந்தபட்ச ஆதரவு விலை இல்லை என்பதால், நெல் பயிரிடும் பரப்பு சிறிதளவே உயரும் என்ற மதிப்பீடும் உள்ளது.இந்தியாவில், நெல் மகசூலை அதிகரிப்பதற்குத்தேவையான வளம் உள்ளது. உலகிலேயே, நெல் மகசூலில் எகிப்து முதல் இடத்தில் உள்ளது. இந்நாட்டில் ஒரு எக்டேரில் 9.73 டன் நெல் உற்பத்தி ஆகிறது. 13வது இடத்தில் உள்ள இந்தியாவில், ஒரு எக்டேரில் 3.37 டன் என்ற அளவிற்கு நெல் உற்பத்தி உள்ளது. இந்தியாவில் அதிக பரப்பளவில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. எனினும் நிகர நெல் மகசூலில்,சீனாவிற்கு அடுத்த இடத் தில்தான் உள்ளது.இந்தியாவில் இருந்து, கடந்த 2009-10ம் ஆண்டில், 20 லட்சம் டன் பாசுமதி அரிசியும், ஒரு லட்சத்து 39 ஆயிரம் டன் பாசுமதி அல்லாத அரிசியும் ஏற்றுமதி செய்யப்பட்டது. இதன் மதிப்பு 11 ஆயிரத்து 273 கோடி ரூபாய்.இந்திய விவசாயத்தில் பருவ மழை முக்கிய பங்கு வகிக்கிறது. நெல் சாகுபடிக்கு அதிக அளவில் தண்ணீர் தேவைப்படுகிறது. இதனால் கோதுமை விவசாயம்போல், குறைந்த அளவு தண்ணீரில் நெல் சாகுபடிமேற்கொள்வதற்கான ஆய்வில், ஒடிசாவின் கட்டாக் நகரில் உள்ள மத்திய நெல் ஆராய்ச்சி நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

**கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் விலை குறைய வாய்ப்பு**

மே 29,2011,02:49



புதுடில்லி:கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடரின் விலை, நடப்பு கோடை மாதத்தில் 10 முதல் 12 சதவீதம் அதி கரித்ததால், தேக்கம் அடைந்துள்ளது. இதனால், கூடிய விரைவில் பால் பவுடரின் விலை குறைய வாய்ப் புள் ளது. நாட்டில், நடப்பு கோடை காலத்தில், கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் விலை 10 முதல் 12 சதவீதம் அதிகரித்தது. அதாவது, ஒரு கிலோ பால் பவுடர் விலை 180 ரூபாயில் இருந்து 200 ரூபாய்க்கு சென்றது. கடந் தாண்டு, டிசம்பர் மாதம், ஒரு கிலோ பால் பவுடர் விலை 165 ரூபாயாக இருந்தது. ஏற்றுமதிக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில், கூட்டுறவு நிலையங்கள் இது போன்ற பால் பவுடரை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்தது.இந்நிலையில், உள்நாட்டில், விலை அதிகரித்ததால், வாடிக்கையாளர்கள், வாங்குவதை குறைத்து கொண்டனர். இதனால், விரைவில், ஒரு கிலோ மீது 10 ரூபாய் வரை விலை குறையலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.உள்நாட்டில், பொதுவாக, கோடை காலத்தில், கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடருக்கு அதிகளவில் கிராக்கி இருக்கும். ஆனால், நடப்பாண்டில் தேவை குறைந்து காணப்பட்டது. பால் பவுடரை, அதிக நாள்கள், இருப்பு, வைக்க முடியாது என்பதால், விலை குறைத்து விற்க பால் பவுடர் விற்பனையாளர்கள் முடிவு செய்தி ருப்பதாக கூறப்படுகிறது.கடந்த 2010-11ம் நிதியாண்டில், நாட்டில் இருந்து 500 கோடி ரூபாய் அளவிற்கு, பாலாடை கட்டி மற்றும் கொழுப்பு நீக்கப்பட்ட பால் பவுடர் ஏற்றுமதி செய்யப்பட்டது. உள்நாட்டு தேவை மற்றும் விலையை கட்டுப்படுத்தும் வகையில், இவற்றின் ஏற்றுமதிக்கு சென்ற பிப்ரவரி மாதம் தடை விதிக்கப்பட்டது. ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட தடையை அடுத்து, வரி இல்லாமல், 30 ஆயிரம் டன் பால் பொருள்களை இறக்குமதி செய்ய மத்திய அரசு அனுமதி அளித்திருந்தது.

**பாமாயில், கடலை பருப்பு உயர்வு மிளகாய் வத்தல் விலையும் உயரலாம்**

மே 29,2011,02:46



விருதுநகர்:விருதுநகர் மார்க்கெட்டில் பாமாயில், கொண்டைக்கடலை, பொரிகடலை, நிலக்கடலை பருப்பு, புண்ணாக்கு விலை உயர்ந்துள்ள நிலையில், மிளகாய் வத்தல் வரத்து குறைவால் விலை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.விருதுநகர் மார்க்கெட்டில் சர்க்கரை விலை மூடைக்கு 2795 லிருந்து 2785 ரூபாயாக குறைந்துள்ளது. கடலெண்ணெய் டின்னுக்கு 1350 லிருந்து 1380,ரூபாயாகவும், சூரிய காந்தி எண்ணெய் 1170, பாமாயில் 910 லிருந்து 950 ஆகவும், நிலக்கடலைப் பருப்பு 4100 லிருந்து 4,300 , கடலைப் புண்ணாக்கு மூடை 2800 லிருந்து 3000 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது. உளுந்து விலை மூடைக்கு 4900 லிருந்து 4800 , சுமார் ரக உளுந்து 4100 லிருந்து 4900, பர்மா பருவட்டு உளுந்து 5100 லிருந்து 4900 ரூபாயாக உள்ளது. நயம் உளுந்தம் பருப்பு 6400 , பர்மா பருவட்டு பருப்பு 6200 ரூபாயாகவுள்ளது. துவரை 3800 லிருந்து 3600 , பொடி துவரை 3000 லிருந்து 2800 ஆக குறைந்துள்ளது. துவரம் பருப்பு 5700, பொடி துவரம் பருப்பு 4600 ரூபாயாக உள்ளது. பாசிப்பயறு 6400, லயன் பருவட்டு 3900 ,சுமார் ரகம் 3700 ரூபாயாகவும் உள்ளது. பாசிப்பருப்பு 5700, சுமார் ரகம் 5500 ரூபாயாக உள்ளது. மைதா 2180 ,ரவை 2140 லிருந்து 2170 ஆக உயர்ந்துள்ளது. கொண்டைக்கடலை 2700, பொரிகடலை 2080 ரூபாயாக உள்ளது.

மிளகாய் புது வத்தல் 8400, சுமார் ரகம் 7500 லிருந்து 8000, முண்டு வத்தல் 7000 லிருந்து 7500 ஆக உள்ளது. சோடை வத்தல் 3200, பழைய சோடை வத்தல் 2400 ரூபாயாகவும் உள்ளது. 'மிளகாய் வத்தல் வரத்து குறைந்துள்ளதாலும், கோடையை முன்னிட்டு ஆந்திர மிளகாய் மார்க்கெட் மூடப்பட்டிருப்பதாலும் வத்தல் விலை தொடர்ந்து உயர வாய்ப்புள்ளதாக,' வியாபாரிகள் தெரிவித்தனர்.

தினகரன்

## வெங்காயம் ஏற்றுமதி சரிவு

பதிவு செய்த நாள் 5/30/2011 2:10:54 AM



புதுடெல்லி : கடந்த 2010&11 நிதியாண்டில் வெங்காயம் ஏற்றுமதி 31 சதவீதம் சரிந்துள்ளது. 2009&10 நிதியாண்டில் 1.87 கோடி டன் வெங்காயம் ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால், 2010&11 நிதியாண்டில் வெங்காயம் ஏற்றுமதி 31 சதவீதம் சரிந்து, 1.28 கோடி டன்னாகி உள்ளது. வெங்காயம் அதிக அளவில் விளையும் மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்களில் கடந்த ஆண்டு பருவமழை காலம் தவறி பெய்ததால் வெங்காய பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனால் விளைச்சல் குறைந்ததே ஏற்றுமதி சரிந்ததற்கு காரணம் என இத்துறை சார்ந்தவர்கள் கூறியுள்ளனர்.

இதுதவிர, தொடர் மழை காரணமாக கடந்த டிசம்பரில் வெங்காய விளைச்சல் பாதிக்கப்பட்டதால் அதன் விலை கடுமையாக உயர்ந்தது. ஒரு கிலோ ஸி 100&ஐ நெருங்கியது. எனவே, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக வெங்காய ஏற்றுமதிக்கு மத்திய அரசு தற்கால தடை விதித்திருந்தது. இதுவும் ஏற்றுமதி குறைந்ததற்கு மற்றொரு காரணமாகும்.

## மானிய உணவு பொருள் 68% பேருக்கு கிடைக்கும்

பதிவு செய்த நாள் 5/30/2011 2:10:22 AM



புதுடெல்லி : மத்திய அரசின் தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் நடைமுறைக்கு வந்தால், மானிய விலையில் உணவுப் பொருட்களை பெற, 68 சதவீதம் பேருக்கு சட்ட ரீதியாக உரிமை கிடைக்கும். வறுமையை ஒழித்து, அனைவருக்கும் உணவு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், தேசிய உணவு பாதுகாப்பு சட்டம் கொண்டுவர மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பாக, சோனியா காந்தி தலைமையிலான தேசிய ஆலோசனை கவுன்சில் (என்ஏசி) மற்றும் ரங்கராஜன் குழு தனித்தனியே தங்களது பரிந்துரையை மத்திய உணவு அமைச்சகத்திடம் வழங்கி உள்ளது. இந்த பரிந்துரையின் அடிப்படையில், உணவு பாதுகாப்பு சட்டத்துக்கான மாதிரி சட்ட முன்வடிவை மத்திய உணவு அமைச்சகம் தயாரித்துள்ளது. இதை, உணவுப் பொருள் குறித்து முடிவு எடுப்பதற்கான அதிகாரம் பெற்ற அமைச்சர்கள் குழுவிடம் அடுத்த வாரம் சமர்ப்பிக்க உள்ளது. இக்குழு ஒப்புதல் வழங்கினால், நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல் செய்யப்பட்டு சட்டமாக நிறைவேறும்.

இந்த புதிய சட்டம் நடைமுறைக்கு வந்தால், மானிய விலையில் உணவுப் பொருட்களை சட்டப்படி பெறுவதற்கான உரிமை 68 சதவீதம் பேருக்கு கிடைக்கும். இந்திய மக்கள் தொகை 120 கோடியைத் தாண்டி உள்ளநிலையில், 75 சதவீதம் பேருக்கு மானிய விலையில் உணவுப் பொருட்களை வழங்க வேண்டும் என்ற தேசிய ஆலோசனை கவுன்சிலின் பரிந்துரையைவிட இது குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இப்போது சராசரியாக ஒரு குடும்பத்துக்கு 35 கிலோ அரிசி அல்லது கோதுமை வழங்கப்படுகிறது. இதற்கு பதில், தனி நபர் எண்ணிக்கையின் அடிப்படையில் உணவுப் பொருட்களை மானிய விலையில் வழங்கும் வகையில் சட்ட திருத்தம் செய்யப்படும் என தெரிகிறது. இதன்படி, ஒவ்வொருவருக்கும் 7 கிலோ உணவுப் பொருள் கிடைக்கும்.

இந்த சட்டத்தின் மூலம், மானிய விலை உணவுப் பொருட்களுக்கான செலவு ரூ.1 லட்சம் கோடியாக அதிகரிக்கும். இப்போது இது
ஸி 80 ஆயிரம் கோடியாக உள்ளது. இப்போது நாடு முழுவதும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள 6.52 கோடி குடும்பங்களுக்கு மாதம் 30 கிலோ அரிசி அல்லது கோதுமையும் வறுமைக் கோட்டுக்கு மேல் உள்ள 11.5 கோடி குடும்பங்களுக்கு 15 கிலோ அரிசியும் வழங்கப்படுகிறது.

## உளுந்து, பாசி, துவரம் பருப்பு விலை சரிவு

பதிவு செய்த நாள் 5/29/2011 6:04:15 AM



விருதுநகர்: உணவுப் பொருள்கள் விற்பனை மந்தமாகி இருப்பதால் உளுந்து, பாசிப்பருப்பு, துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகள் மூட்டைக்கு ஸி200 வரை விலை சரிந்துள்ளன.
பள்ளி, கல்லு ரிகள் திறக்க இருப்பதால் குழந்தைகளுக்கான கல்வி கட்டணம் கட்ட வேண்டிய காரணங்களால் உணவு பொருள்கள் விற்பனை மந்தமாகி உள்ளது. இதன் காரணமாக உளுந்தம் பருப்பு, துவரம் பருப்பு, பாசிப்பருப்பு விலை (100 கிலோ) மூட்டைக்கு ஸி200 சரிந்துள்ளது. உளுந்து தஞ்சை ஸி4400, பர்மா பருவட்டு ஸி4400, பொடி ஸி4000, உருட்டு உளுந்தம் பருப்பு லயன் ஸி6000, பர்மா பருவட்டு ஸி5600, பொடி ஸி4800, தொளி ஸி5000, துவரை லயன் ஸி3000, துவரம் பருப்பு லயன் ஸி5200, உடைசல் பருப்பு ஸி4500, பாசிப்பயறு தஞ்சை ஸி4000, கோவில்பட்டி பயறு ஸி3900, பாசிப்பருப்பு நாடு ஸி5500, தஞ்சை பருப்பு ஸி5100 என விலை சரிந்து விற்பனையானது.
கடலைப் பருப்பு தட்டுப்பாடு காரணமாக (80 கிலோ) மூட்டை ஸி4050 லிருந்து ஸி4150 என விலை உயர்ந்துள்ளது. இதனால் கடலை எண்ணெய் (15 கிலோ) டின்னுக்கு ஸி50 விலை உயர்ந்து ஸி1425 என விற்பனையானது. கடலை புண்ணாக்கு (100 கிலோ) ஸி50 உயர்ந்து ஸி2950 என விற்பனையானது. குரூட் பாமயில் டன் 1235 டாலராக உயர்ந்துள்ளதால், பாமாயில் (15 கிலோ) டின்னுக்கு ஸி10 அதிகரித்து ஸி900 என விற்பனையானது. வத்தல் வரத்து முடியும் தருவாயில், தரமான வத்தல் வரத்து இல்லை. ஆந்திரா குண்டூர் வத்தல் மார்க்கெட் கோடை விடுமுறையால் மூடப்பட்டுள்ளது. விருதுநகர் வத்தல் மார்க்கெட்டிற்கு கடந்த வார வரத்தும் 750 மூட்டைகளாக சரிந்துள்ளன. தரம் குறைந்த வத்தல் ஸி7000 முதல் ஸி7500, தரமான சம்பா வத்தல் ஸி8000 முதல் ஸி8500 வரை விற்பனையானது.

## முட்டை விலை 2 காசு உயர்வு

பதிவு செய்த நாள் 5/29/2011 5:53:03 AM



நாமக்கல்: நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலையில் 2 காசு உயர்த்தப்பட்டுள்ளது.
நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில் பண்ணையாளர்கள், வியாபாரிகள் கலந்து கொண்டு ஆலோசித்தனர். இந்த கூட்டத்தில், முட்டை கொள்முதல் விலையில் 2 காசுகள் உயர்த்தி 228 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. பிற மண்டலங்களில் முட்டை விலை தொடர்ந்து உயர்ந்து வருவதால் இங்கும் முட்டை விலை உயர்த்தப்பட்டு வருவதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி ^38 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ^56 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.
பிற மண்டல முட்டை விலை (பைசாவில்) விபரம் வருமாறு:
சென்னை 231, பெங்களூர் 218, மைசூர் 220, ஐதராபாத் 196, மும்பை 222, விஜயவாடா 197, கொல்கத்தா 235, பர்வாலா 205, டெல்லி 216.